# C.S.I TAMIL CHURCH - OMAN

# "பாலைவன மன்னா"




மன்னா – 9 ஆகஸ்ட் 2019 பிரதி – 5



## ஆயர் மடல்



இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே!

பாலைவன மன்னா மாத இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்நூல் பல கடின அனுபவங்களினூடாக பலருடைய முயற்சியாலும், ஜெபத்தாலும், உழைப்பாலும் உருவாக்கப்படும் நமது திருச்சபையின் பதிவுப் பெட்டகம். இந்நூலை நாம் கைகளில் பெறும்போது இன்னும் நமது திருச்சபையை நினைவுகூர்ந்து ஜெபிக்கவும், நம் பங்களிப்பை இப்புத்தகத்தில் தரவும், கொடுக்கப்பட்டிருக்கும் ஆன்மிக மன்னாவை புசிக்கவும், அட்டவணைப்படி நடைபெறும் அனைத்து தொழுகைகளிலும் பங்குபெறவும் நம்மை அழைக்கிறது என்னும் உணர்வோடு இப்புத்தகத்தை பயன்படுத்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### விடுமுறையின் நிறைவு:-

இவ்வாண்டின் விடுமுறையை சிறப்பாக நிறைவு செய்துள்ளோம். பலர் சொந்த ஊர் சென்று திரும்பியுள்ளோம். சிலர் நம் பணி தொடர்ந்துள்ளோம். பயணப் பாதுகாப்பையும், புதிய அனுபவங்களையும் தந்த ஆண்டவரை நன்றியோடு துதிப்போம். தொடருகின்ற நமது வாழ்வு புத்தெழுச்சியோடு அமைய ஆண்டவர் அருள்புரிய அன்போடு வாழ்த்துகிறேன்.

### விடுதலையின் மகிழ்ச்சி:-

ஆகஸ்ட் மாதம் என்றவுடனே நமது உள்ளங்களில் வந்து செல்வது இந்திய சுதந்திர திருநாள் ஆகஸ்ட் 15. சமூக வாழ்வில் சுதந்திர இந்தியாவை நாம் பெற்றிருந்தாலும் இன்றும் அடிமை நிலையில் வாழும் மக்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். பொருளாதார அடிமைகளாக, அரசியல் அடிமைகளாக, சாதிய அடிமைகளாக, சமய அடிமைத்துவம் உடையவர்களாக வாழும் மக்களும் விடுதலையின் மகிழ்ச்சியை அடையவேண்டும் என்னும் வேட்கை நிறைந்த ஜெபஉணர்வு நமக்கு வேண்டும்.

இறைஇயேசுவின் மூலம் நாம் பெற்றிருக்கும் ஆன்மிக விடுதலையான பாவத்திலிருந்து விடுதலை, பிசாசின் கட்டிலிருந்து விடுதலை, அடிமைத்தன வாழ்வில் விடுதலை இவை இம்மண்ணில் யாவருடைய வாழ்விலும் மலரவேண்டும் என்னும் வேண்டுதலோடும் விருப்பங்களோடும் ஆகஸ்ட் மாத அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

ஆண்டவர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்!


**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்.**

## விடுதலை வாழ்வு தரும் ஆண்டவர்



**"ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (சங்கீதம் 50:15).**



இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே! சுதந்திர இந்தியாவில் சுதந்தரமாக வாழ அழைக்கப் பட்டுள்ளோம். உலக நாடுகளில் எல்லாம் சுதந்திரமாக சுற்றித்திரிகிறோம். நம் சொந்த வாழ்வில் விடுதலை வேண்டி, விடுவிப்பார் இன்றி தவிக்கிறோம். இதுதான் மனித வாழ்வு.

நானே வழியும், வாய்மையும், வாழ்வுமாய் இருக்கிறேன் என வாக்களித்தவர் நமது ஆண்டவர். மனுக்குல விடுதலைக்காய் தன்னையே கையளித்தவர் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். இயேசுநாதர் சிலுவை சுமந்து செல்லும்போது அழும் பெண்களைப் பார்த்து எனக்காக அழாதீர்கள், உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்று ஆற்றல்படுத்தினார். அவருடைய விடுதலை அருளும் ஆற்றல் தொடர்ந்து வெளிப்பட்டுக்கொண்டே இருந்தது.

பழைய ஏற்பாட்டு புத்தகத்தின் யாத்திராகமத்தில் இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு கர்த்தராகிய தேவன் எகிப்தியரின் கைகளிலிருந்து விடுதலையாக்கி வழிநடத்தினார். மேகஸ்தம்பமும், அக்கினிஸ்தம்பமும் அவர்களை வழிநடத்தியது என அறிவோம். தொடர்ந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுதலை தந்து வழிநடத்த நியாயாதிபதிகளை ஏற்படுத்தினார். பின்னர் இராஜாக்களை ஏற்படுத்தினார். தொடர்ந்து அனைத்துலக மக்களின் விடுதலைக்காக தமது குமாரனை நமக்காகத் தந்து இவ்வளவாய் அன்புகூர்ந்து நம்மை விடுவித்தார்.

இறை இயேசுவின் வழி விடுதலை வாழ்வு தொடருகிறது என்பதை நாம் நினைவுகூரவேண்டும். இவ்விடுதலை அப்போஸ்தலர்கள், போதகர்கள், ஊழியக்காரர்கள் வழியே மக்களை சென்றடைகிறது. அப்போஸ்தலர் 16:16-ல் பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணுகிற இடத்திற்கு போகையில் குறிசொல்லும் ஆவியினால் கட்டுண்ட ஒரு பெண்ணை விடுவித்தனர். அவளால் இலாபம் அடைந்தவர்களால் குற்றப்படுத்தப்பட்டு ரோம அதிகாரிகளால் சிறைப்படுத்தப்பட்டனர். சிறைப்படுத்தப்பட்டு, வஸ்திரங்கள் கிழிக்கப்பட்டு, அடிக்கப்பட்டு உட்காவலறையில் பத்திரமாக பாதுகாக்கும்படி கால்கள் தொழுமரத்தில் இணைக்கப்பட்டு இருந்தது.

## 1. கட்டுகளில் விடுதலை:-

ரோம அதிகாரிகளால் கட்டளை பெறப்பட்டு, கால்கள் தொழுமரத்தில் மாட்டப்பட்டு வேதனையோடு இருந்த பவுலும் சீலாவும் அப்போஸ்தலர் 16:25-ல் ''நடுராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம்பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக்கேட்டுக் கொண்டிருந்தார்கள்'' என்று திருமறையில் காண்கிறோம். கர்த்தரைத் துதிக்க துதிக்க மிகப்பெரிய அசைவு ஏற்பட்டது. சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசைந்தது. பூமி அதிர்ந்தது. துதியின் ஆற்றல் விடுதலை கொண்டுவருகிறது, கட்டுகள் கழன்று போகப்பண்ணுகிறது என்பதைக் காண்கிறோம்.

பவுலும் சீலாவும் கட்டுகளில் கர்த்தரைத் துதித்தார்கள். அவர்கள் அறிந்திருந்த இரகசியம் இதுதான். பாடுகள், வேதனைகள், கட்டுகள் மத்தியில் முறுமுறுக்காமல், தேவனை குற்றப்படுத்தாமல், ஆண்டவரை துதிக்கக் கற்றுத்தரும் பாடம் இப்பகுதியில் விசுவாசிகளாகிய நமக்கு வெளிப்படுகிறது என்பதே உண்மை. அடைத்து வைத்திருந்த கதவுகளெல்லாம் திறவுண்டது; எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. எத்தனை கதவுகள், எத்தனை பேருடைய எத்தனை கட்டுகள் எனக் கூறப்படவில்லை. ஆனால் துதியின் பாடல், ஜெபத்தின் ஆற்றல் கட்டுகளில் இருந்தவர்களை விடுதலையாக்கியது என்பது உண்மையாகும்.

## 2. காவலில் விடுதலை:-

பத்திரமாய் காக்கும்படி உட்காவலறையில் வைக்கப்பட்டவர்கள்தான் பவுலும் சீலாவும். சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து பார்க்கும்போது சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக்கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணினான். உலகத்தார் நினைப்பதைப்போல கர்த்தர் நம்மை நடத்துவது இல்லை. காவலில் வைக்கப்பட்டிருப்பவர்கள் கட்டுகள் கழன்றவுடன் ஓடிப்போவார்கள். ஆனால் கடவுளுடைய திட்டம் காவலாளிகளுக்கும் விடுதலை கொடுப்பதுதான். எனவேதான் கட்டுகளில் விடுதலை பெற்றபின்னும் காவலில் அமர்ந்திருந்தார்கள்.

தன்னைத்தானே கொலைச்செய்ய பட்டயத்தை உருவின சிறைச்சாலைக்காரனிடம் பவுல் சத்தமிட்டு நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்துகொள்ளாதே, நாங்கள் இங்கேதான் இருக்கிறோம் என்றான். கர்த்தரால் விடுதலை பெற்ற பவுல் காவலாளியையும் காக்க தயங்கவில்லை. காவலிலிருந்து விடுதலையை சிறைச்சாலையில் இருந்தவர்களுக்கும், தனக்கும் மட்டுமல்லாது காவலாளிக்கும் விடுதலை தேடித்தரும் செயலாக அமைந்தது. நம்முடைய வாழ்வுக்கு சவால் இதுதான். நான் விடுதலை பெறவேண்டும் என்னும் வேட்கை மட்டுமல்ல

என்னோடு இருக்கும் மக்களையும் விடுதலையாக்கவேண்டும் என்னும் உணர்வு வேண்டும். இந்த உணர்வுதான் மனுக்குல மீட்புக்காக பரலோக தேவனை பூமியில் கொண்டுவந்தது; மனுக்குலத்திற்கு விடுதலை பெற்றுத்தந்தது.

## 3. கர்த்தரால் விடுதலை:-

விடுதலை பல நிலைகளில் வருகிறது. திருமறையில் கட்டப்பட்ட கழுதை சீடர்களால் விடுவிக்கப்படுகிறது. லேகியோன் பிசாசினால் கட்டப்பட்ட மனுஷன் இயேசு கிறிஸ்துவால் விடுவிக்கப்படுகிறான். வாழ்வில் கட்டுண்ட மக்களை விடுவிப்பதுதான் இறைநோக்கம். மக்களின் நல்வாழ்வை விரும்பும் கடவுள் மக்களின் வாழ்வில் இறங்கி செயலாற்றுகின்றார்.

பவுல் சீலாவுடைய சிறைச்சாலை வாழ்வில் விடுதலை கர்த்தரால் கொண்டுவரப்பட்டது. இதை பவுலும் சீலாவும் உணர்ந்துகொண்டனர் என்பதைக் காட்டிலும் சிறைச்சாலைக் காவலாளி அறிந்துகொண்டார். எனவே பவுல் சீலாவிடம் ‘‘ஆண்டவன்மாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும்’’ என்று (அப். 16:30) கேட்கிறான்.

பவுலும் சீலாவும் சிறைச்சாலை கட்டுகளிலிருந்தும், காவலிலிருந்தும் விடுதலை பெற்றார்கள். சிறைச்சாலைக்காரன் வாழ்வில் விடுதலை வேண்டி அதாவது கர்த்தரால் மட்டுமே கொடுக்கக்கூடிய விடுதலை வேண்டி விண்ணப்பிக்கின்றான். அதற்கு அவர்கள் ‘‘கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்’’ (அப். 16:31) என்று விடுதலையின் அளவு விரிந்துகொண்டே செல்கிறது, தொடர்ந்துகொண்டே செல்கிறது.

கர்த்தரால் வரும் ஆசீர்வாதம் குறிப்பிட்ட ஒருவரை மட்டுமல்ல அதைச் சார்ந்தவர்களையும் சென்றடைகிறது. மழைக்காக ஜெபிக்கும் ஒருவர் அந்த பகுதியில் அனைவருக்கும் ஆசீர்வாதத்திற்கு காரணமாக மாறுகிறார். இதுபோல் சிறைச்சாலையின் விடுதலைக்காய் கர்த்தரைத் துதித்துப் பாடி, ஜெபித்து பெற்ற விடுதலை, அவர்களுக்கும் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தவர்களுக்கும், சிறைச்சாலை காவலாளிகளுக்கும் ஏன் அவர்கள் வீட்டார் அனைவருக்கும் விடுதலையையும், விசுவாசத்தையும், வாழ்வையும் கொண்டுவந்தது. நாமும் நம்முடைய வேண்டுதலினால் நமக்கும் மற்றவர்களுக்கும் வாழ்வும் விடுதலையும் அளிக்கும்படி செயல்படுவோம்.

ஆண்டவர்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## சிறுகதை

# குருவியின் சுதந்திர கனவு



ஒரு சிறு குருவிக்கு அன்று ஒரு அழகிய கனவு வந்தது. கனவில் மிக அழகான ஒரு உலகம் தெரிந்தது. இதுவரை குருவி அப்படியொரு சுதந்திர உலகத்தைப் பார்த்ததில்லை. வண்ண வண்ண விளக்குகள், அழகான நதிகள், மரங்கள், எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி என்று அந்த அற்புத உலகம் மயக்கியது. எப்படியாவது அந்த உலகத்துக்குப் போகவேண்டும், அந்த சந்தோஷங்களை அனுபவித்தே ஆகவேண்டும் என்று அந்த குருவி விரும்பியது.

ஆனால் போகும் வழிதான் அதற்கு தெரியவில்லை. அது பறந்து போகும்போது ஒரு சேவலைப் பார்த்தது. காலத்தையெல்லாம் கணிக்கும் சேவலிடம் குருவி வழிகேட்டது. ‘‘எனக்கு முழுவிபரம் தெரியாது, தெரிந்தவரை சொல்கிறேன். அதற்கு விலையாக உன் சிறகுகளில் ஒன்றைத் தரவேண்டும்’’ என்றது. ஒரே ஒரு சிறகுதானே என்று குருவியும் சரி என்றது. குருவி அவர் சொன்ன வழியில் பறந்து சென்றது. குறிப்பிட்ட இடத்துக்கு மேல் அது வழி தெரியாமல் திகைத்து நிற்க அந்த வழியே ஒரு பாம்பு வந்தது. பாம்பிடம் குருவி தன் கனவு பற்றி சொல்லி ‘‘சுதந்திர உலகை அனுபவிக்க நான் அங்கே போகிறேன், எனக்கு வழிகாட்டேன்’’ என்றது. பாம்பு ‘‘இங்கிருந்து அந்த பகுதிக்குச் செல்லும் வழி ஓரளவுக்குத்தான் எனக்குத் தெரியும். சொல்கிறேன், பதிலுக்கு நீ எனக்கு என்ன தருவாய்? உன் அழகான சிறகில் ஒன்றைத் தந்துவிடு’’ என்றது. இன்னொரு சிறகுதானே தந்தால் போச்சு என்று குருவியும் சம்மதித்தது. பாம்பு சொன்ன பாதையில் குருவி பயணிக்க, அதுவும் ஓரளவுக்குத்தான் போக முடிந்தது. அதற்குப் பிறகு வழி தெரியவில்லை. இப்படியே அந்தக் குருவி, அங்கங்கே இருந்த சிலரிடம் வழி கேட்டு கேட்டு பறந்தது. அவர்களும் வழி சொல்லிவிட்டு குருவியிடம் இருந்து ஒரு சிறகை விலையாக கேட்டார்கள். குருவியும் அந்த அற்புத உலகின் சந்தோஷங்களை அனுபவிக்கப்போகும் ஆசையில் வழி சொன்னவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு சிறகாக பிரித்துக் கொடுத்தபடி சென்றது. முடிவாக, அதோ கனவில் கண்ட அந்த அழகான உலகம் அதன் கண்முன் தெரிந்தது. வந்துவிட்டோம்.... வந்தேவிட்டோம்... இன்னும் சில நூறடி பறந்தால் அந்த அற்புத உலகம். குருவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. ஆனால், இதென்ன... ஏன் என்னால் பறக்க முடியவில்லை. ஐயோ என் உடம்பெல்லாம் கனக்கிறதே, கீழே இருந்து காற்றில் எழும்பவே

முடியவில்லையே என்று கதறியது. மெல்ல மெல்ல குருவிக்குப் புரிந்தது. பறப்பதற்கான சிறகுகள் தன்னிடம் இப்போது இல்லை என்ற உண்மை விளங்கியது.

இன்றைய சுதந்திர உலகமாகிய, இன்டர்நெட், செல்போன் போன்றவைகளில் மூழ்கியிருக்கிறோம். வாழும் சின்ன சின்ன சந்தோஷங்களை மறந்து மாயையான உலகை சொந்தமாக்க முயல்கிறோம்.

''நவீன வசதிகளே சந்தோஷம்'' என்று உலகின் வசதிகளைப் பெருக்கி கொள்வதற்காக இன்றைய நம் சந்தோஷங்களை இழந்து கொண்டிருக்கிறோம். குடும்பத்துடன் வெளியே செல்வது, பிள்ளைகளோடு மனம்விட்டுப் பேசுவது, பிடித்த புத்தகம் படிப்பது, ஆலயம் செல்வது, பிடித்த உடை உடுத்துவது, பிடித்த உணவு உண்பது, உறவுகளோடு உரையாடுவது என்று எல்லா சந்தோஷ சிறகுகளையும் ஒவ்வொன்றாக வெட்டி வெட்டி வீசுகிறோம்.

கடைசியில் அந்த வசதிகள் தேவை என்னும் நிலை வரும்போது நரை கூடி, திரை வந்து உடலும் மனசும் தளர்ந்து போகிறது. எல்லாம் இருந்தும் பெற முடியாத நிலை ஏற்படுகிறது.

''மகிழ்ச்சி என்பது வசதிகளில் இல்லை,
நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இருக்கிறது.
ஒவ்வொரு நொடியையும் அனுபவித்து வாழ்வோம்''.
''இந்த நிமிடம் மட்டுமே இறைவன் நமக்கருளியது''
இணைந்து வாழ்வோம்; இறைநாமத்தை உயர்த்துவோம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## *New Arrivals*

### "பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்"



**Miss. Dafrena Leah**
**D/o Mr. C. Sujin & Mrs. Gracilin Melba**
**18-07-2019**

**Master. Evan B. Moses**
**S/o Mr. Benny Moses & Mrs. Jeevlin Esther**
**20-07-2019**

# பெண்கள் பகுதி

## கீழ்படிதலும் - -சுதந்திரமா?

சுதந்திர இந்தியாவில் பிறந்து சுதந்திரமாக தேசமெங்கும் சென்று வாழும் வாழ்வு பெற்றிருக்கும் நம்மை கட்டுப்பாடு என்னும் உணர்வு நெறிப்படுத்துகிறது என்பதுதான் உண்மை. கணவனுக்கு மனைவி கீழ்ப்படிந்து வாழும்போது அவர்களிடையே சுதந்திர உணர்வு ஏற்படுகிறது. மனைவியை கணவன் உண்மையாய் நேசிக்கும்போது அங்கே விடுதலை உணர்வு வெளிப்படுகிறது.



திருமறையில் நாம் பார்க்கும்போது “சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள்” (1பேதுரு 3:6).

இந்த நாட்களில் பெண்கள் தங்கள் நிலையிலிருந்து வேறுபடுவதால் குடும்பங்களில் பிரச்சனைகளும் போராட்டங்களும் ஏற்படுகின்றன. அநேக சகோதரர்கள் தங்கள் பிரச்சனைக்கு காரணம் தங்கள் மனைவியே என்று சாதிக்கிறார்கள். மனைவிகளோ கணவன்மார் சரியாக இருந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்று கூறுகிறார்கள். வேதத்தின்படி தேவன் கணவரைத்தான் மனைவிக்கு தலையாக வைத்திருப்பதால் (எபேசியர் 5:23) பெண்கள் கணவருக்கு கீழ்ப்படிந்து வாழும்போது, குடும்பத்தில் சந்தோஷம் பெருகும். வேதத்தில் இடம்பெற்றுள்ள இரண்டு பெண்களை குறித்து நாம் பார்த்து அவர்கள் வாழ்க்கையிலிருந்து சில பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

**முதலாவதாக லோத்தின் மனைவியை** குறித்து பார்ப்போம். (ஆதியாகமம் 19:12-26) லோத்து தேர்ந்தெடுத்து குடியேறினது செழிப்பான பூமிதான். அதே சமயம் பாவமும், அக்கிரமமும் நிறைந்து காணப்படும் இடமாகவும் அது காணப்பட்டது. அதினிமித்தம் அப்பட்டணம் தீக்கிரையாக தேவனால் தீர்ப்பிடப்பட்டது. ஆனாலும் தேவன் தமது தாசனாகிய ஆபிரகாமின் நிமித்தம் லோத்தின் குடும்பத்தை காப்பாற்ற எண்ணினார். ஆகவே ஒரு தூதன் லோத்தின் குடும்பத்தினருடைய கைகளை பிடித்து இழுத்து கொண்டுவரும் விதமாக ஊருக்கு வெளியே கொண்டுவந்து விடுகிறார். அவர்களிடம் ஒரே ஒரு கட்டளை கொடுக்கிறார். ‘பின்னால் திரும்பி பார்க்காதீர்கள்’ என்று, ஆனால் லோத்தின் மனைவியோ வசதியாய் வாழ்ந்து வந்த வீட்டை, செல்வ செழிப்பைவிட்டு இப்படி ஒரு நிமிடத்தில் கிளம்பிவிட்டோமே, முக்கியமான ஒன்றையும் கூட இவர் எடுக்கவிடவில்லையே என்ற ஏக்கமோ, அல்லது நாம் காப்பாற்றப்பட்டு

விட்டோம், ஆனால் நம் அண்டை வீட்டுக்காரனுக்கும், நம்மோடு எப்போதும் பிரச்சனைபண்ணும் எதிர் வீட்டுக்காரனுக்கும் நேரிடுகிறது என்ன? என்பதை பார்க்கவோ என்னவோ பின்னிட்டு பார்த்துவிட்டாள். அந்த நொடிப்பொழுதில்தானே உப்புத்தூணாக மாறிப்போனாள்.

**இரண்டாவதாக ஆபிரகாமின் மனைவி** சாராளைக் குறித்து காண்போம் (ஆதியாகமம் 12-ம் அதிகாரம்). ஆபிரகாமிடம் தேவன் “உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பன் வீட்டையும்விட்டு புறப்பட்டு, நான் காண்பிக்கும் தேசத்திற்கு போ” என்று கட்டளை கொடுத்தார். இதை ஆபிரகாம் முதலில் தன் மனைவியிடம் கூறியிருப்பார். காலாகாலமாய் வாழ்ந்த இடத்தை விட்டு எங்கு செல்கிறோம் என்ற நிச்சயமில்லாமல் செய்யும் பயணம் ஒரு பெண்ணுக்கு எளிதானதல்ல. திடுதிடுப்பென்று எல்லாவற்றையும் விட்டுவா என்கிறீர்களே என்று ஒரு வார்த்தைகூட சாராள் முறுமுறுத்ததாய் எழுதப்படவில்லை. ஆபிரகாமின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தேவசித்தம் நிறைவேற தோள்கொடுத்து செல்கிறாள்.

இவ்விருவர் வாழ்விலுமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய காரியம் என்ன? தேவசித்தம் நம் குடும்ப வாழ்விலே நிறைவேற வேண்டுமானால் குடும்பத்தலைவரோடு இணைந்து தேவனை நம்பி முன்செல்லவேண்டும். லோத்தின் மனைவியினுடைய இச்செயலால் ஆசீர்வாதமற்ற ஒரு சந்ததி பூமியிலே உருவாக அவள் காரணமாகிவிட்டாள். ஆனால் சாராளுடைய கீழ்ப்படிதலினிமித்தம், அவளுடைய பிள்ளைகளோ, தகப்பனுடைய சுதந்தரத்தில் பங்குள்ளவர்களாய், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் என்று நாம் இன்றும் தேவனை தொழுதுகொள்ளும்படியாக வேதாகமத்தின் முழு சரித்திரத்திற்கும் காரணமாயினர்.

பிரியமான சகோதரிகளே! ஒரு குடும்பம் நிமிர்ந்து நிற்கவேண்டுமானால் முதுகெலும்பாய் இருக்கவேண்டியது ஒரு குடும்பத்தலைவியே. குடும்பத்தில் ஒரு பெண்ணின் பொறுப்பு மிக முக்கியமானது. ஆனால் அவளோ தான் விட்டுவந்த பிறந்தவீட்டு செல்வ செழிப்பையே பெருமையாய் பேசிக்கொண்டு ஏங்குவாளானால் அக்குடும்பம் மகிழ்ச்சியாய் இருக்கமுடியாது. அதுபோல, அண்டைவீடு, எதிர்வீடு, பக்கத்துவீடுகளில் என்ன நடக்கிறது என்று அவர்களது பிரச்சனைகளை பார்க்கவும், கேட்கவும் விரும்புவாளானால் அதுவும் குடும்பத்தில் அநேக பிரச்சனைகளையே கொண்டுவரும். ஆனால் திருமணத்தின்மூலம் தேவன் கொடுத்துள்ள குடும்ப சூழ்நிலையில் பிள்ளைகளை தேவபக்தியில் வளர்த்து, தேவசித்தத்தின்படி குடும்பத்தில் மாறுதல்கள் வரும்போது ஜெபித்து இறைதிட்டம் உணர்ந்து அவருக்கு பின்னால் செல்லும்போது நமது சந்ததியினருக்கு ஆசீர்வாதமாய் இருப்போம். ஆமென் அல்லேலூயா!

நன்மையான ஈவுகளை தேவாதி தேவன் தந்தார்
கீழ்படிந்தே அவர் சத்தம் கேட்டு சாட்சியாய் ஜீவிப்பாயா

நம் பாதையில் காப்பாற்றியே கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு நன்றியாய் சேவிப்பாயா

நானும் என் வீட்டாருமென்றால் கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா? நீயும் சேவிப்பாயா?

**ஜெபம்:** எங்களை அதிகமாய் நேசித்து வழிநடத்தும் நல்ல தகப்பனே, மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்லவென்று அவனுக்கு ஏற்ற துணையாய் உருவாக்கிக் கொடுத்தீரே, அந்த ஏற்ற துணையினிமித்தம் குடும்பத்தில் குழப்பங்கள் வராதபடி, ஒவ்வொரு மனைவியும் தன் கணவருக்கு கீழ்ப்படிந்து, தேவசித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக வாழும்படி உதவி செய்வீராக. தேவனை நோக்கி முன்னேறி, தன் குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருகிற மகளாக ஒவ்வொரு சகோதரியையும் மாற்றுவீராக. எங்கள் ஜெபத்தைக் கேட்டு எங்களுக்கு பதில் கொடுப்பவரே உமக்கே நன்றி. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் எங்கள் ஜீவனுள்ள நல்ல பிதாவே ஆமென்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் ~ ஆகஸ்ட் 2019

| | | |
|---|---|---|
| 02-08-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Sumi Vinobha |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. David Prabhakaran |
| 09-08-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Shiny Prem Meshak |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Daniel |
| 16-08-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Shiny Johan |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Ennesaur Jesu Paul |
| 23-08-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Thamari Johnsonraj |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnana Ruban |
| 30-08-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Vanitha Rani Prince |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Gnanadhas |
| 06-09-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Virgin Jegatha Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Immanuel Prince |

## சத்தியத்திற்கு சாட்சி...

**விண்ணில் : 03-09-1866**
**நாடு : வேல்ஸ்**
**தரிசன பூமி : கொரியா**

கிறிஸ்துவின் பணிசெய்ய இளம் உள்ளங்கள் எழும்ப வேண்டும். கொளுந்துவிட்டு எரியும் ஆற்றலை, அடக்கி வைக்காமல் அவைகளை கிறிஸ்துவின் செயல்களுக்கு உத்வேகம் தர அர்ப்பணிக்கவேண்டும்.

இளம் வயதிலேயே மிகப்பெரிய சாதனையைச் செய்து, ஆண்டவருக்குள் ஆயிரக்கணக்கானோரை ஆத்தும ஆதாயம் செய்த வீரர்கள் பலர் உண்டு. சீகன்பால்கு, ஹென்றி மார்ட்டின், டேவிட் பிரெய்னார்டு, சாமுவேல் மாரிஸ் போன்ற பலர் இதிலே அடங்குவர். இவர்கள் அனைவரும் இளம்வயதிலேயே மாபெரும் பணியைச் செய்து, மண்ணிலே தங்கள் வாழ்க்கையை வெற்றியுடன் முடித்தவர்கள்.

வேல்ஸ் நாட்டில் பிறந்த ராபர்ட் எரேமியன் தாமஸ், சுவிசேஷ வாஞ்சை தன் உள்ளத்தில் கொளுந்துவிட்டு எரிந்ததால், அவற்றை பிறருக்குச் சொல்ல ஆர்வம் கொண்டார். திருமணமான தன் இளம் மனைவியுடன் சீனாவை நோக்கி சென்றார். அடுக்கடுக்கான துன்பங்கள், இவரை அலைக்கழித்தது. ஒரு வருடத்திற்குள்ளாகவே மனைவி மரித்துப் போனார். செய்வதறியாது திகைத்த இவரை ஆண்டவரின் கரம் தாங்கியது. அந்நாட்களில் கொரியா நாட்டிற்குள் செல்ல வெளிநாட்டவருக்கு அனுமதி இல்லை. பல முயற்சிகளுக்குப்பின், 1865-ம் ஆண்டு அந்நாட்டிற்குள் சென்றார் ராபர்ட். தான் கொண்டு சென்ற வேதாகமத்தின் பிரதிகளை மக்களுக்குக் கொடுத்தார். கிறிஸ்தவர்களானால் கொலை செய்யப்படுவோம் என்று அறிந்தும், பலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

1866-ம் ஆண்டு, மீண்டும் அந்நாட்டிற்கு வியாபாரக் கப்பலில் பயணமானார். ஆனால் இக்கப்பல் தடுத்து நிறுத்தப்பட்டது. கொரிய போர்வீரர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டது. தப்பிக்க நினைத்தவர்கள் வாளால் வெட்டி கொல்லப்பட்டனர். போர் வீரர்கள் ராபர்ட்டை சூழ்ந்துகொள்ள இவரோ, **“என்னை கொல்லுங்கள் ஆனால் என் கையிலுள்ள வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்”** எனக் கெஞ்சினார். கொடூர மனம் கொண்ட போர்வீரர்கள் இவர் தலையை வெட்டித் தள்ளினர். ஆனால் சிலர் அவ்வேதாகமத்தின் பிரதிகளை தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இன்று கொரியா உலகத்திலேயே மிகப்பெரிய திருச்சபையைப் பெற்று, கிறிஸ்தவ நாடாக திகழ்கின்றது.

அன்பரே! மாபெரும் பணிசெய்த ராபர்ட்டை போன்று செயல்படுவீர்களா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு**: : "தன்னைத் தியாகம் செய்ய முன்வராாத எந்தவொரு நபரினாலும், எந்த ஒரு ஆத்துமாவையும் நேசர் இயேசுவின் கல்வாரி சிலுவையண்டை கொண்டுவர முடியாது" .

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! ஆத்துமாக்களை குறித்த வாஞ்சையை என்னுள்ளத்தில் பற்றியெரியச் செய்யும்.

**தியானத்திற்கு : 2 இரா. 24-25, எசேக்கியல் 13, லூக்கா 9**

(நன்றி: 365 மிஷனெரிகளின் வரலாறு)

## பாடலின் பின்னணியம்

### பாதை காட்டும், மா யெகோவா
**(Guide me, O thou great Jehovah)**

**சங்கீதம் 73:24** பாடல் : **Rev. வில்லியம்ஸ்**

ராகம் : **Rev. வில்லியம்ஸ்**

1. பாதை காட்டும், மா யெகோவா
   பரதேசியான நான்
   பலவீனன், அறிவீனன்,
   இவ்வுலோகம் காடு தான்;
   வானாகாரம்
   தந்து என்னை போஷியும்



இப்பாடலை எழுதிய வில்லியம்ஸ் போதகர் மெதடிஸ்ட் சபையை சேர்ந்தவர். அவர் 1717-ஆம் ஆண்டு, பெப்ருவரி மாதம் 11-ஆம் தேதி உவேல்ஸ் நாட்டில் கார்மார்தென்ஷயர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரது தந்தை விவசாய தொழில் செய்து வந்தவர். இளமைக் கல்வியை முடித்தபின், இவர் வைத்தியத் தொழிலுக்காக பயில ஆரம்பித்தார். ஆனால் சிறிது காலத்தில் அதைவிட்டு, குருத்துவ ஊழியத்தில் ஈடுபட்டு, 1740-ல் டீக்கனாக அபிஷேகம் பெற்று, மூன்று ஆண்டுகள் குருத்துவ ஊழியம் செய்தார். சுவிசேஷப் பிரபல்லியத்தில் மிக்க ஆர்வமுடையவராதலால், சபை ஊழியத்தைவிட்டு தனியாக ஊழியம் செய்ய ஆரம்பித்தார். தமது ஊழியத்தின் ஆரம்பத்தில் அவர் வெஸ்லியின் கொள்கைகளை ஆதரித்து, இறுதியில் கால்வினிஸ்டு மெதடிஸ்ட் கோஷ்டியினரைப் பின்பற்றினார். தமது தனி ஊழியத்தில் நாற்பது ஆண்டுகளுக்குள் அவர் தொண்ணூற்று ஆறாயிரம் மைல்கள் பிரயாணம் செய்தார்.

1785-ஆம் ஆண்டு, ஹண்டிங்டன் சீமாட்டியாகிய செலீனா அம்மையார், பக்தியுள்ள வாலிபரைக் குருத்துவ ஊழியத்துக்காகப் பயிற்றுவிக்க தென்வேல்ஸ் நாட்டில் ஒரு வேத சாஸ்திரப் பயிற்சி கல்லூரி ஆரம்பித்தார். கல்லூரியின் ஆரம்ப விழாவில் பாடப்படுவதற்காக ஒரு புதிய பாடலை எழுதித் தருமாறு, 'உவேல்ஸ் நாட்டு இனிய பாடகர்' (Sweet singer of Wales) என்றழைக்கப்பட்ட வில்லியம்ஸ் போதகரை ஹண்டிங்டன் சீமாட்டியார் கேட்டனர். ஆகவே போதகர் 'பாதை காட்டும் மா யெகோவா' என்னும் பாடலை எழுதி, அதற்கேற்ற ஒரு இராகமும் அமைத்து, விழாவில் தமது வாத்தியக் கோஷ்டியுடன் முதல் முறையாகப் பாடினார். முதலில் இப்பாடல் வெல்ஷ் மொழியில் எழுதப்பட்டு, பின்னர் ஆங்கிலத்திலும், இப்போது உலகத்தின் நானாபாகங்களிலும் பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பாடப்பட்டு வருகிறது. இப்பாடல் பல்வேறு இராகங்களில் பாடப்பட்டு வந்தாலும், CWM Rhondda என்னும் உவேல்ஸ் நாட்டு அதற்கு மிகப் பொருத்தமானதென்று கருதப்படுகிறது.

வில்லியம்ஸ் போதகர் வெல்ஷ் மொழியில் எண்ணூறுக்கு அதிகமான பாடல்களும், ஆங்கிலத்தில் நூற்றுக்கு அதிகமான பாடல்களும் எழுதியுள்ளார். அவர் எழுதிய வேறு பாடல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படவில்லை. அவர் 1791-ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 11-ஆம் தேதி உவேல்ஸ் நாட்டில் பான்டிஸெலின் என்னுமிடத்தில் தமது 74-ம் வயதில் காலமானார்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தின்று விடுதலையடைந்து நாற்பது ஆண்டுகளாகப் பாலைவனத்தில் பிரயாணம் செய்து, இறுதியில் கானான் தேசத்தை அடைந்தனர். பாதை தெரியாத பாலைவனத்தில் அவர்களுக்கு வழிகாட்டியது பகலில் மேகஸ்தம்பமும், இரவில் தீப ஸ்தம்பமுமே. வழியில் அவர்களுக்கு தேவையான எல்லாவற்றையும் கடவுளே ஆச்சரியமான விதமாக அளித்தார். நாமும் நமது சொற்பக்காலம் பூலோக வாழ்க்கையில், பாலைவனத்தில் வழிதெரியாது அலைந்து திரியும் பரதேசிகள் போலவே இருக்கிறோம். கடவுளின் வழிகாட்டுதலை நாம் பின்பற்றினால் இஸ்ரவேலர் யோர்தானைப் பத்திரமாகக் கடந்து கானான் தேசத்தை அடைந்தது போல, சாவின் அந்தகாரமாகிய யோர்தானைப் பத்திரமாக கடந்து பரம கானானை அடையலாம்.

**பாடகர் குழு – CSI Tamil Church – Oman**

**(நன்றி: கிறிஸ்தவக் கீதங்களின் வரலாறு)**

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஜூலை 2019




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஜுலை மாத பெண்கள் சங்க கூடுகை ஜுலை மாதம் 18-ம் தேதி, CSI Malayalam hall-ல் வைத்து இரவு 9 மணியளவில் திருமதி. நிஷா புரூஸ்வெல்ட் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனைத் துதித்த பின்னர் திருமதி. அஸ்பின் பெஜோ அவர்கள் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள்.

அதன்பின் திருமறைப்பாடமாக சங்கீதம் 44-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டு, திருமதி. தாமரி ஜாண்சன் அவர்கள், ஏசா மற்றும் யாக்கோபின் குணநலன்களை வேத வசனங்களைக் கொண்டு விவரித்து, கீழ்கண்ட குறிப்புகளை பகிர்ந்துகொண்டார்கள்.

1. ஏசாவைப்போல் ஆசீர்வாதத்தை அலட்சியம் செய்யக்கூடாது.
2. யாக்கோபைப்போல் போராடி ஜெபிக்கவேண்டும்.
3. யாக்கோபைப்போல் எதிராளியையும் மாற்றும் ஜெபம் ஏறெடுக்கவேண்டும்.

தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பின்னர் போதகர் அவர்கள் திறந்த வேதாகமத் தேர்வைக் குறித்து விளக்கினார்கள். அதன்பின் போதகர் அவர்கள் மன்றாட்டு ஜெபத்தை ஜெபித்து ஆரம்பித்து வைத்தார்கள். தொடர்ந்து திருமதி. கிரேஸ்லின் ராணி பென்சாம் அவர்கள் ஜெபக்குறிப்புகளைப் பகிர்ந்துகொள்ள, அந்த ஜெபக்குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன்பின் சாட்சிவேளையில் பலர் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்து, ஜெபக்குறிப்புகளையும் பகிர்ந்து கொண்டார்கள். திருமதி. சாரா ராஜாசிங் சாட்சி சொன்னவர்களுக்காகவும், ஜெப குறிப்பு சொன்னவர்களுக்காகவும் மற்றும் கலந்துகொண்ட அனைவருக்காகவும் ஜெபித்து நிறைவு ஜெபம் ஏறெடுத்தார்கள். பெண்கள் சங்கமானது 11:10 மணிக்கு இனிதே நிறைவுபெற்றது. இறுதியில் Sponsor செய்த **திருமதி. சுமதி ஜோண்ஸ்** மற்றும் **திருமதி. ஜெயா விக்டர்** அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## நிகழ்வும் ~ பாடமும்



I asked God
"how to handle life"?
God replied "Check your Room"
My room gave me all the answers;
Roof said : Aim high.
Fan said : Be cool.
Clock said : Value time.
Calender said : Be up to date.
Wallet said : Save now for the future.
Mirror said : Always observe yourself.
Lamps said : Light up other's life.
Wall said : Share others' load.
Window said : Expand the vision.
Floor said : Always be down to earth.
Stairs said : Watch each step you take.
And I said
Thank You God!

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. Meshach & Family | CSI Christhu Puram, Palapallam | Ghala |
| Mr. Jasper Stalin | CSI Church Vanniyoor | Mumtaz |

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஜூலை 2019




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவருடைய மகா கிருபையால் 18-09-2019 அன்று இரவு ஆண்கள் சங்க கூடுகை மார்த்தோமா ஹாலில் வைத்து நடைபெற்றது. அதில் சபைபோதகர் Rev. Dr. N. ஜெசின் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. பின்பு ஆவிக்குரிய பாடல்கள் பாடப்பட்டு போதகர் அவர்களால் நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சிறப்பு விருந்தினராக ஆண்கள் சங்கத்திற்கு வந்திருந்த மலேசியாவை சேர்ந்த Prof. Dr. ஜாண்சன் அலங்காரம் அவர்கள், ஆண்டவருடைய வார்த்தைகளை பகிர்ந்துகொண்டார்கள். அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

ஆதியாகமம் 18:17-33 வரை வாசிக்கப்பட்டு ஆண்டவரின் ஆன்மீக உரையை வழங்கினார்கள். படிப்பு, பதவி ஆண்டவருக்கு தேவை இல்லை. பெரியவன், சிறியவன், பணக்காரன் என்றில்லை; எல்லோரும் சமம். ஆண்டவருக்கு தேவை ஆத்தும வாழ்க்கை. இரண்டு மகாபெரிய பட்டணத்தை (சோதோம், கொமோரா) அழித்தார். ஆபிரகாம் ஆண்டவரிடத்தில் விண்ணப்பம் பண்ணினபோது லோத்தை விடுவித்தார். லோத்து குடியிருந்த தேசத்தை அழித்தபோதும், விசுவாசித்த லோத்தை ஆண்டவர் விடுவித்தார்.

யாத்திராகமம் 2:2-ல் தன் பிள்ளையை மூன்று மாதம் ஒளித்துவைத்து அவள் அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல் ஒரு நாணற்பெட்டியை எடுத்து அதில் பிசினும், கீலும் பூசி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். என்ன நடக்குமோ என்று ஜெபித்துக்கொண்டு தூரத்திலே பார்த்துக்கொண்டிருந்தாள். ஆண்டவர் பார்வோன் குமாரத்தியை கொண்டு பிள்ளையை காப்பாற்றினார். குழந்தையாகிய மோசேயை கர்த்தர் தலைவனாக உருவாக்கினார் என்று சிறப்பாக செய்தியளித்தார்.

செய்தி முடிந்ததும் ஜெபக்குறிப்புகளுக்காக ஜெபிக்கப்பட்டது. சபைக்காகவும், குடும்பங்களுக்காகவும், தேவைகளுக்காகவும், தேசங்களுக்காகவும் ஜெபிக்கப்பட்டது. 11 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. கூட்டம் அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது.

இந்த மாதம் தங்களுடைய பங்களிப்பை வழங்கியவர்கள் திரு. V.N. ராஜன் மற்றும் திரு. சைலஸ் அவர்கள். உணவு வழங்கியவர் திரு. V.N. ராஜன்.

அருமையான ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு ஆண்கள் சங்கத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுச்செல்ல அழைக்கிறோம்.

**திரு. மு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## Birthday Celebrants – August 2019

*MAY GOD BLESS ALL*




| | |
|---|---|
| 01st August | Mrs. Baby Rajakumari, W/o Mr. Immanuel Prince |
| 02nd August | Mr. Jino Retna Kumar |
| 05th August | Mrs. Sam Jeba Santhana Venus W/o Mr. Sam Issac Benaya |
| 05th August | Mr. S. Augustin Dhayanantha Raj |
| 05th August | Mrs. Rupa, W/o Mr. T.N. Berjin |
| 06th August | Master. Edric Edward, S/o Mr. Edward Sam |
| 14th August | Mr. W. Santhosh Christopher |
| 19th August | Mr. G. Anantha Raj |
| 22nd August | Master. Ben Leroy, S/o Mr. Sam Issac Benaya |
| 23rd August | Mrs. Alice, W/o Mr. Dhanraj |
| 23rd August | Master. Joash, S/o Mr. Vinobha |
| 23rd August | Mr. S. Jasper Stalin |
| 28th August | Miss. Alen D. Vijitha, D/o Mr. Devaraj |
| 29th August | Mr. Rejicilin |
| 31st August | Mr. Pratheesh |


## Wedding Day Anniversaries – August 2019

| | |
|---|---|
| 04th August | Mr. Robin Devadhas & Mrs. Golden Irene Sheeja |
| 06th August | Mr. Jones & Mrs. Sumathy |
| 17th August | Mr. S. Jasper Stalin & Mrs. P.N. Sobia |
| 19th August | Mr. Berin Raja & Mrs. Femila |
| 27th August | Mr. Raju & Mrs. Jesintha |

## ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 62

### ஆகஸ்ட் 2019 மாத கேள்விகள்

### (1 நாளாகமம் 23 - 29 வரை)




1. கர்த்தரைத் துதிக்க தாவீதால் ஏற்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை எத்தனை பேர்?
2. சீமேயின் குமாரராயிருந்தவர்கள் எத்தனை பேர்? யார் யார்?
3. எத்தனை வயதுக்கு மேல் கர்த்தருடைய ஆலயத்தில் பணிவிடை செய்தார்கள்?
4. இத்தாமாரின் புத்திரர்கள் எத்தனை பேர் தலைமையாக வைக்கப்பட்டனர்?
5. பரிசுத்தஸ்தல காரியத்திற்கு சீட்டுபோட்டு தெரிந்துகொண்டபோது பத்தொன்பதாவது சீட்டு யாருடைய பெயருக்கு விழுந்தது?
6. கர்த்தரைப் பாட சீட்டுபோட்டு தெரிந்துகொண்டபோது பன்னிரெண்டாவது சீட்டு யாருடைய பெயருக்கு விழுந்தது?
7. லேவியரில் அகியா என்பவனுடைய பணி என்ன?
8. சிம்ரியை தலைவனாக வைத்தது யார்?
9. தாவீது அரசாண்ட வருடங்கள் எத்தனை?
10. ராஜாவை சேவிக்கிறதற்கு ஒவ்வொரு வகுப்பிற்கும் எத்தனை பேரை தெரிந்துகொண்டனர்?
11. நாலாம் மாதத்தின் நான்காவது சேனாதிபதி யார்?
12. எலிகூ என்பவன் யார்?
13. தாவீது யாரை தொகையேற்றவில்லை?
14. பள்ளத்தாக்கிலுள்ள எந்த மரத்துக்கு யோவாஸ் விசாரிப்புகாரனாயிருந்தான்?
15. படிப்பும் புத்தியுமுள்ள ஆலோசனைக்காரன் யார்?
16. கர்த்தருடைய ஆலயத்தைக் கட்ட கர்த்தர் யாரைத் தெரிந்துகொண்டார்?
17. கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து எவைகளை அறிகிறார்?
18. ஆலயம் கட்டும் வேலை மாதிரியை கர்த்தர் எப்படிக் கொடுத்தார்?
19. கர்த்தருடைய ஆலயத்திற்கு காணிக்கை யார் செலுத்தலாம் என்றார்?
20. தேவன் இருதயத்தை சோதித்து எதில் பிரியமாயிருக்கிறீர் என்று தாவீது கூறுகிறார்?


## ஜுலை 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. தேவனுடைய பெட்டியை திரும்பகொண்டுவந்து – 1நாளா. 13:3
2. அபினகாப், புதுரதத்தில் - 1நாளா. 13:7
3. மூன்று மாதம் - 1நாளா. 13:14
4. பாகால் பிராசீம் - 1நாளா. 14:11
5. சுட்டெரித்தார்கள் - 1நாளா. 14:12
6. பரிசுத்தம்பண்ணி – 1நாளா. 15:12
7. சங்கீதத்தலைவன் - 1நாளா. 15:22
8. சர்வாங்க தகனபலியையும், சமாதான பலியையும் - 1நாளா. 16:1
9. நித்தமும் - 1நாளா. 16:11
10. ஓபேத் ஏதோமையும், ஓசாவையும் - 1நாளா. 16:38
11. நாத்தான் - 1நாளா. 17:2
12. இஸ்ரவேலின் அதிபதியாக – 1நாளா. 17:7
13. வெள்ளி, பொன் - 1நாளா. 18:11
14. ஆனூனின் தகப்பனாகிய நாகாஸ் - 1நாளா. 19:2
15. ஏழாயிரம் - 1நாளா. 19:18
16. 24 – 1நாளா. 20:6
17. சாத்தான் - 1நாளா. 21:1
18. 3 வருட பஞ்சம், 3 மாத யுத்தம், 3 நாள் சங்கார கொள்ளைநோய் - 1நாளா. 21:12
19. 70 ஆயிரம் - 1நாளா. 21:14
20. இளைப்பாறுதல் - 1நாளா. 22:18

## ஜுலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mr. Alex Baskar | Mr. Johan Pratheep |
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Bejo Nelson | Mr. Prince J. P. |
| Mr. David Prabhakaran | Mr. Rajan V. N. |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Ramesh |
| Mr. Jean C. R. Shibin | Mr. Robin Devadhas |
| Mr. Jino John | Without Name - 1 |

# பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி ~ 77




## ஆகஸ்ட் 2019 மாத கேள்விகள்

## (சங்கீதம் 33 - 42 வரை)

1. கர்த்தருடைய காருண்ணியத்தினால் நிறைந்திருப்பது எது?
2. இரட்சிக்கிறதற்கு எந்த மிருகம் விருதா?
3. நாவை எதற்கு விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும்?
4. நீதிமான்களுடைய சரீரத்தில் எவற்றை கர்த்தர் காப்பாற்றுகிறார்?
5. தாவீது தனக்கு அருமையானதை எவைகளுக்கு தப்புவிக்க மன்றாடுகிறார்?
6. உமது ஆலயத்திலுள்ள எதினால் திருப்தியடையலாம்?
7. பெருமைக்காரரின் எது நம் மேல் வராமல் இருக்கவேண்டும்?
8. சாந்தகுணமுள்ளவர்கள் எதை சுதந்தரிப்பார்கள்?
9. துன்மார்க்கருடைய புயங்கள் என்னவாகும்?
10. நல்ல மனுஷனுடைய எவை கர்த்தரால் உறுதிப்படும்?
11. யாருடைய நடைகள் பிசகுவதில்லை?
12. எரிபந்தமாய் எரிவது எது?
13. தன் நாட்கள் எத்தனை விரற்கடையளவாக்கினீர் என்று குறிப்பிடுகிறார்?
14. எவைகளிலிருந்து தூக்கியெடுத்து கன்மலையின்மேல் நிறுத்தியதாக தாவீது கூறுகிறார்?
15. சிறுமையும் எளிமையுமானவனிடத்தில் கர்த்தர் எப்படி இருக்கிறார்?
16. தீங்கு நாளில் கர்த்தர் யாரை விடுவிப்பார்?
17. என் பிராண சிநேகிதன் எனக்கு விரோதமாய் எப்படி எழும்புகிறான்?
18. என் சத்துரு ஏன் என்மேல் ஜெயங்கொள்ளவில்லை?
19. நீரோடைகளை வாஞ்சித்து கதறுவது எது?
20. மதகுகளின் இரைச்சலால் எது கூப்பிடுகிறது?

## ஜுலை 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. உமது கோலும், தடியும் - சங்கீதம் 23:4
2. கைகளில் சுத்தமுள்ளவனும், இருதயத்தில் மாசில்லாதவனுமாயிருந்து – சங்கீதம் 24:4

3. முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே – சங்கீதம் 25:3
4. வலைக்கு – சங்கீதம் 25:15
5. வியாகுலங்கள் - சங்கீதம் 25:17
6. உத்தமமும், நேர்மையும் - சங்கீதம் 25:21
7. கர்த்தரைத் துதிப்பேன் - சங்கீதம் 26:12
8. கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பது – சங்கீதம் 27:4
9. தகப்பனும் தாயும் - சங்கீதம் 27:10
10. கர்த்தருடைய – சங்கீதம் 27:13
11. இருதயத்தை ஸ்திரப்படுத்துவார் - சங்கீதம் 27:4
12. தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு – சங்கீதம் 28:8
13. கர்த்தருக்கு மகிமையும் வல்லமையும் செலுத்துங்கள் - சங். 29:1
14. கேதுரு – சங்கீதம் 29:5
15. காதேஸ் - சங்கீதம் 29:8
16. ஒரு நிமிஷம் - சங்கீதம் 30:5
17. கலக்கம் - சங்கீதம் 30:7
18. மகிழ்ச்சியினால் - சங்கீதம் 30:11
19. எலும்புகள் - சங்கீதம் 31:10
20. பாக்கியவான் - சங்கீதம் 32:1

## ஜூலை மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | |
|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Baskar | Mrs. Priyadarsini Kanagavel |
| Mrs. Felsi Rani John | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Juslin Jaslin | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Leela Gladson | Mrs. Shiney Johan |
| Mrs. Manju Martin | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Menaka David | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Nisha Rajan | |

# இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 01-08-2019 | வியாழன் - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 01-08-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 02-08-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 09-08-2019 | வெள்ளி ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 10-08-2019 | சனி – உபவாச ஜெபக் கூட்டம்<br>இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00 |
| 15-08-2019 | வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 15-08-2019 | வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00 |
| 16-08-2019 | வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 23-08-2019 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 30-08-2019 | வெள்ளிஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |
| 01-09-2019 | ஞாயிறு - அருணோதய ஆராதனை<br>இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00 |
| 05-09-2019 | வியாழன்– இரவு ஜெபக்கூடுகை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00 |
| 06-09-2019 | வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45 |

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-



- நம் போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழு தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிட ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயத்திற்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- கன்னியாகுமரி பேராயத்தின் புதிய பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும் இறையருள் வேண்டி மன்றாடுவோம்.

## திருப்பணிகளுக்கான மன்றாட்டு குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

- பணிக்களங்களில் அற்புத அடையாளங்கள் நிகழவும், அநேக புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், புதிய புதிய திருச்சபைகள் பெருகவும் ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

## திருப்பணி மற்றும் தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- அருட்பணி ஊழியங்கள் இந்தியாவின் பல இடங்களில் பல குழுக்கள் வாயிலாக செய்யப்பட்டு வரும் சூழலில் நம் பேராயத்தின் DMPB, HMS, செனானா மிஷன் வழியே நடைபெறும் அருட்பணி ஊழியங்கள் அனைத்தின் வழியாக இறையன்பிற்கு நேராக மக்கள் வழிநடத்தப்பட ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- நமது தேசத்தின் பல கிராமங்களில் இன்னும் நற்செய்தி சொல்லப்படவுமில்லை, திருச்சபைகள் நிறுவப்படவுமில்லை. எல்லா கிராமப் பகுதிகளுக்கும் நற்செய்தி விரைந்துச் சொல்லப்படவும், புதிய திருச்சபைகள் நிறுவப்படவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.
- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

- மனிதர்கள் படைப்புகளை பண்படுத்தி பாதுகாப்பதற்குப் பதிலாக பாழ்படுத்தி வருகின்றனர். இதனால் பருவ மழையின்மை, வறட்சி, புவி வெப்பமாகுதல் போன்ற பல தீமைகளை உலக நாடுகள் சந்தித்து வருகின்ற நிலையில், படைப்புகள் பண்படுத்தப்படவும் பாதுகாக்கப்படவும் ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- நடுத்தர மற்றும் ஏழைமக்கள் மிகப்பெரிய பாதிப்புகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்ற நாளில் நல்ல விடுதலைப் பெறவும் ஜெபிப்போம்.

## அனுதின மன்னா – ஆகஸ்ட் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி தரப்பட்டுள்ளது. வாசித்து, தியானித்து குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள். ஓராண்டில் திருமறைப்பகுதியை தனி ஜெபத்தில் தியானித்து பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 1 | வியாழன் | சங். 37:25 | சங். 37:39 | எரேமியா 15-19 |
| **ஆகஸ்ட் 2** | **வெள்ளி** | **நீதி. 2:1-15** | **நீதி. 2:7** | **எரேமியா 20-23** |
| ஆகஸ்ட் 3 | சனி | எஸ்றா 9:1-15 | எஸ்றா 9:9 | எரேமியா 24-26 |
| ஆகஸ்ட் 4 | ஞாயிறு | நீதி. 30:1-13 | நீதி. 30:5 | எரேமியா 27-29 |
| ஆகஸ்ட் 5 | திங்கள் | தானி. 6:16-24 | தானி. 6:22 | எரேமியா 30-31 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஆகஸ்ட் 6 | செவ்வாய் | மாற். 6:14-20 | மாற்கு 6:20 | எரேமியா 32-34 |
| ஆகஸ்ட் 7 | புதன் | சங். 121:1-8 | சங். 121:7 | எரேமியா 35-37 |
| ஆகஸ்ட் 8 | வியாழன் | யோபு 5:15-27 | யோபு 5:19 | எரேமியா 38-41 |
| **ஆகஸ்ட் 9** | **வெள்ளி** | **சங். 61:1-8** | **சங். 61:4** | **எரேமியா 42-45** |
| ஆகஸ்ட் 10 | சனி | சங். 72:1-20 | சங். 72:14 | எரேமியா 46-48 |
| ஆகஸ்ட் 11 | ஞாயிறு | எரே. 1:1-19 | எரேமி. 1:8 | எரேமியா 49 |
| ஆகஸ்ட் 12 | திங்கள் | எரே. 31:10-17 | எரேமி. 31:10 | எரேமியா 50 |
| ஆகஸ்ட் 13 | செவ்வாய் | நியா. 18:1-6 | நியா 18:6 | எரேமியா 51-52 |
| ஆகஸ்ட் 14 | புதன் | உபா. 32:1-12 | உபா. 32:11,12 | புலம்பல் 1-2 |
| ஆகஸ்ட் 15 | வியாழன் | சங். 16:1-11 | சங். 16:5 | புலம்பல் 3-5 |
| **ஆகஸ்ட் 16** | **வெள்ளி** | **ஏசா. 32:1-8** | **ஏசா 32:2** | **எசேக்கியேல் 1-4** |
| ஆகஸ்ட் 17 | சனி | 1சாமு. 2:1-10 | 1சாமு. 2:9 | எசேக்கியேல் 5-9 |
| ஆகஸ்ட் 18 | ஞாயிறு | ஏசா. 26:1-9 | ஏசா. 26:3 | எசேக்கியேல் 10-13 |
| ஆகஸ்ட் 19 | திங்கள் | சங். 41:1-13 | சங். 41:2 | எசேக்கியேல் 14-16 |
| ஆகஸ்ட் 20 | செவ்வாய் | எரே. 49:7-11 | எரே. 49:11 | எசேக்கியேல் 17-19 |
| ஆகஸ்ட் 21 | புதன் | சகரி. 9:11-17 | சகரி. 9:15 | எசேக்கியேல் 20-21 |
| ஆகஸ்ட் 22 | வியாழன் | புலம். 3:22-41 | புலம். 3:22 | எசேக்கியேல் 22-23 |
| **ஆகஸ்ட் 23** | **வெள்ளி** | **அப். 27:21-36** | **அப். 27:22** | **எசேக்கியேல் 24-26** |
| ஆகஸ்ட் 24 | சனி | ஏசா. 52:3-12 | ஏசா 52:12 | எசேக்கியேல் 27-28 |
| ஆகஸ்ட் 25 | ஞாயிறு | சங். 103:1-14 | சங். 103:3,4 | எசேக்கியேல் 29-31 |
| ஆகஸ்ட் 26 | திங்கள் | சங். 91:1-16 | சங். 91:4 | எசேக்கியேல் 32-33 |
| ஆகஸ்ட் 27 | செவ்வாய் | வெளி 3:7-13 | வெளி 3:10 | எசேக்கியேல் 34-36 |
| ஆகஸ்ட் 28 | புதன் | 2இரா. 17:20-41 | 2இரா. 17:39 | எசேக்கியேல் 37-39 |
| ஆகஸ்ட் 29 | வியாழன் | 2கொரி. 1:3-11 | 2கொரி. 1:10 | எசேக்கியேல் 40-42 |
| **ஆகஸ்ட் 30** | **வெள்ளி** | **2கொரி. 4:7-15** | **2கொரி. 4:9** | **எசேக்கியேல் 43-45** |
| ஆகஸ்ட் 31 | சனி | உபா. 33:24-19 | உபா. 33:25 | எசேக்கியேல் 46-48 |
| செப்டம்பர் 1 | ஞாயிறு | ஆதி. 9:8-17 | ஆதி. 9:15,16 | தானியேல் 1-2 |
| செப்டம்பர் 2 | திங்கள் | 2தீமோ. 1:3-7 | 2தீமோ. 1:1 | தானியேல் 3-4 |
| செப்டம்பர் 3 | செவ்வாய் | அப். 10:1-8 | அப். 10:4 | தானியேல் 5-6 |
| செப்டம்பர் 4 | புதன் | ஆதி. 30:22-24 | ஆதி. 30:22 | தானியேல் 7-9 |
| செப்டம்பர் 5 | வியாழன் | எண். 10:1-10 | எண். 10:9 | தானியேல் 10-12 |
| **செப்டம்பர் 6** | **வெள்ளி** | **நியா. 16:21-31** | **நியா. 16:28** | **ஓசியா 1-4** |

# Muhjid xOq;Ffs;

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**